# கலைஞரும் நானும் 56

**எந்த இடத்திலும், எந்தச் சூழலிலும் ஊடகர்கள் அவரை எளிதாகச் சந்திக்கலாம். பத்திரிகையாளர்களைச் சந்திப்பதை அவர் தவிர்த்ததே இல்லை. எழுதுவதற்கான சுதந்திரம், அந்தச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது என்பவற்றில் கலைஞருக்கு நிகராக எவரையும் பார்க்க முடியாது. இளம் பத்திரிகையாளர்களிடம் வயது வித்தியாசமின்றி எளிமையாகப் பழகுவதிலும் கலைஞர் தனித்தன்மை வாய்ந்தவர் என நினைவுகளைப் பகிர்கிறார் பத்திரிகையாளர் மு.குணசேகரன்.**

■ **மு.குணசேகரன்,** தலைமைச் செய்தி ஆசிரியர், சன் செய்திகள்



# “பத்திரிகையாளர்கள் சோர்ஸை சொல்லமாட்டாங்க!”

மிக இளம்வயதிலான ஊடகராக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்திப்பதற்கும், நேர்காணல் செய்வதற்கும், அவரோடு உரையாடுவதற்குமான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மிகக் கடுமையான விமர்சனத்தின் மூலமாகத்தான் அவரை நான் அடைந்தேன். 1999 ஆம் ஆண்டில், பா.ஜ.க.வுடன் கூட்டணி சேரும் தி.மு.கழகத்தின் ஒரு முடிவைக் கடுமையாக விமர்சித்து நான் பணியாற்றி வந்த ‘தினமணி’ நாளிதழில் ஒரு கட்டுரை எழுதினேன். தலையங்கப் பக்கத்தில் வெளியான கட்டுரையில், ‘கலைஞர் ஒரு கருப்புப் பக்கத்தை’ எழுதிக்கொண்டிருக்கிறார் என்கிற விமர்சனத்தை அதில் வைத்திருந்தேன். அந்தக் கட்டுரைக்காகப் பலரும் அலுவலகத்துக்குத் தொலைபேசி செய்து ‘யார் குணசேகரன்’ என விசாரித்திருந்தனர்.

கலைஞர் அந்தக் கட்டுரையை வாசித்துவிட்டு, அதற்கு பதில் அளிக்கும் விதமாக, அந்த காலக் கட்டத்தின் அரசியல் நிலைப்பாட்டை விளக்கி, தங்கள் முடிவை நியாயப்படுத்தும் வகையில் தி.மு.க மூத்த தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் மூலம் ஒரு கட்டுரை அனுப்பி இருந்தார். ‘பராசக்தி’ குணசேகரன்களையே பார்த்த இயக்கம் எங்கள் இயக்கம் என்று விரிந்தது அந்தக் கட்டுரை. இதுதான் கலைஞர் கைக்கொண்டிருந்த மிக முக்கியமான அரசியல் பண்பு. ஏற்பதோ, மறுப்பதோ எதுவாக இருந்தாலும், கருத்தை கருத்தால் மட்டுமே எதிர்கொள்வது என்பதை, கலைஞர் கொண்டிருந்தார். முதல்முறையாக அவரிடம் எனக்கு அந்த அனுபவம் வாய்த்தது.



ஆட்சியில் இருந்தாலும், இல்லாமல் இருந்தாலும் அவர் மீதோ, கட்சியின் மீதோ ஒரு விமர்சனம் சொல்லப்படுகிறது என்றால், அதற்கு உரிய கவனம் கொடுப்பது, பதில் அளிப்பது என்று யோசிப்பாரே தவிர, அவதூறுகள், அடக்குமுறைகளால் அவற்றை எதிர்கொண்டதில்லை. அதில் கண்ணியம் கொண்ட அரசியல் தலைவராக கலைஞர் இருந்தார் என்பதை எனது முதல் அனுபவத்துக்குப் பின்பும் பலமுறை உணர்ந்துகொள்ளும் சந்தர்ப்பங்கள் அமைந்திருக்கின்றன.

## பின்புலம் என்ன?

அப்போது, தொடர்ந்து தினமணியில் அரசியல் விமர்சனக் கட்டுரைகள் எழுதி வந்தேன். கலைஞர் அவற்றை வாசித்துவிட்டு அய்யா சின்னகுத்தூசி அவர்களிடம் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார். நான் குத்தூசி அய்யாவை சந்திக்கச் செல்கையில் அதைக் குறிப்பிடுவார். “யார் அந்தக் குணசேகரன்” “அவர் பின்புலம் என்ன?” என இரண்டு மூன்று முறை விசாரித்தார் என்றும், ‘வாய்ப்பிருந்தால், போய்ப் பாருங்க’ என்றும் சின்னகுத்தூசி சார் கூறினார். அதன்பின்னர், அவரைச் சந்திக்க ஒருநாள் அறிவாலயம் சென்றிருந்தேன். அன்று மாலையே வீட்டிற்கு வரச் சொல்கிறார் என நேரம் ஒதுக்கியதை சண்முகநாதன் குறிப்பிட்டார்.

நான் சென்றதும் உடனடியாக வரச்சொன்னதுடன், எழுந்து நின்று என்னை வரவேற்றார். தயாளு அம்மாள் கையால் காபி கொடுத்து உபசரித்தார். எவ்வளவு உயரத்தில் இருந்தாலும், சிறியவர்களை மதிக்கும் அந்தப் பண்பினை நான் வியந்தேன். கலைஞரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாக இருந்தது. எனது குடும்பப் பின்னணி, இளமைப் பருவம், கல்வி, படித்துக் கொண்டிருக்கிற நூல்கள், எனது பத்திரிக்கைப் பணி ஆகியவற்றை விசாரித்ததுடன், ஊக்கப்படுத்தி அனுப்பினார்.

அப்போதைய அரசியல் சூழலில், பா.ஜ.க. மூத்த தலைவர் இல.கணேசன் ஒரு நிகழ்வில் பேசியதைச் செய்தியாக்கியிருந்தேன். அந்தச் செய்தியின் அரசியல் முக்கியத்துவம் வேறொன்றாக அமைந்துவிட்டது. தேசிய அளவில் கவனம் பெற்றதாகவும், தி.மு.க. சில முக்கிய முடிவுகள் எடுக்கவும் அந்தச் செய்தி காரணமாக அமைந்துவிட்டது. வேறு எந்தப் பத்திரிகையிலும் வரவில்லை. அந்த நேரத்தில் விழுப்புரத்தில் நடைபெற்ற தி.மு.க மாநாட்டுக்கு செய்தி சேகரிக்கச் சென்றிருந்தேன்.

மாநாட்டு வளாகத்தில் இளைஞர் அணியின் ஊர்வலத்தை மேடையில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த கலைஞர், திடீரென என்னைக் கை காட்டி அழைத்தார். ‘அந்தச் செய்தி உண்மைதானே? அப்படித்தான் பேசினாரா?’ என உறுதிப்படுத்திக் கொண்டார்.

## சிறிய செய்தியும் முக்கியம்

எழுத்தாளர்களை, பத்திரிகையாளர்களை மதித்த தலைவர் அவர். ‘அவரைப்போல பிறர் அமைய முடியாது’ எனச் சொல்லும் அளவுக்கு ஊடகங்களுக்கு இடம்கொடுத்தவர். எவ்வளவு கடுமையான விமர்சனம் செய்துவிட்டும், அவரைச் சந்திக்க முடியும். “நீ அப்படி எழுதி இருந்தாய்” என அடுத்த நாள் அந்தக் கோபத்தை அவர் காட்டியதில்லை. மூத்த பத்திரிகையாளர்களிடம்தான் பேசுவேன், இளம் பத்திரிகையாளர்களிடம் பேச மாட்டேன் என்கிற தவிர்ப்புகள் அவரிடம் இருந்ததில்லை.

செய்திகளை அணுகுவதிலும் அவர் வியப்பளிப்பவர். காவிரிப் போராட்டம் ஒத்திவைப்பு தொடர்பான ஒரு செய்தி. இரவு தாமதமாக வருகிறது. அதைத் தயார் செய்து கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். மறுநாள் காலை கலைஞரிடமிருந்து போன். “என்ன அந்தச் செய்தி வரவில்லை” எனக் கேட்கிறார். அவர் போன் செய்த நேரத்தில் நான் ‘பேப்பர்’ பார்க்கவில்லை. “அய்யா தயார் செய்து கொடுத்துவிட்டுத்தான் வந்தேன், என்ன நடந்தது எனத் தெரியவில்லை, பார்க்கிறேன்” என்றேன். அடுத்த ஐந்து நிமிடங்களில் மீண்டும் போன் செய்து, “உள்பக்கத்தில் வந்திருக்கிறது, நான் அவசரத்தில் சரியாகக் கவனிக்கவில்லை, சாரி” எனக் கூறினார். சிறிய செய்திக்கும் அவர் தரும் முக்கியத்துவம், அதைக் கவனிக்காமல் கூறியதற்கு வருத்தம் தெரிவிப்பது என்பதெல்லாம் அவரிடம் மட்டுமே கண்ட வியப்புகள்.

## ‘சோர்ஸை சொல்ல மாட்டாங்க’

2009 ஆம் ஆண்டு, டெல்லியில் டாக்டர் மன்மோகன் சிங் தலைமையில் இரண்டாவது முறையாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைச்சரவை அமைந்த சூழலில், அது தொடர்பான ஒரு செய்தினைப் பதிவு செய்திருந்தேன். அது தொடர்பாக அழைத்தவர், “யார் அந்தத் தகவலைச் சொன்னது?” எனக் கேட்டார். நான் எனக்குக் கிடைத்த தகவல் அடிப்படையில் எழுதியது, எனத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் போனை வைக்கும்போது, “பத்திரிகையாளர்கள் சோர்ஸை சொல்லமாட்டாங்க” என எனக்குக் கேட்கும் விதமாகச் சொல்லிக்கொண்டே போனை வைத்தார். அப்போது அவர் முதலமைச்சராக இருந்தார். எதார்த்தமாக அடுத்த நாள் அவரைச் சந்திக்கவேண்டி இருந்தது. ஆனால், முதல்நாள் பேசியது குறித்த எந்தச் சலனத்தையும் அவரிடம் நான் பார்க்கவில்லை. அதே புன்னகை, அதே விசாரிப்பு, அதே மதிப்பினை அவரிடம் கண்டேன். என் தொழில்மீது நான் கொண்டிருந்த மதிப்பினை உணர்ந்தவராக அவர் இருந்தார்.

புதிய தலைமைச் செயலகம் திறப்புவிழா முடிந்து, சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்தது. அப்போது, நிகழ்ச்சி முடிந்து புறப்படுகையில் அவ்வளவு கூட்டத்திலும் என்னை அழைத்து விசாரித்ததுடன், வேறென்ன எனக் கேட்ட நேரத்தில் ஒரு நேர்காணல் வேண்டும் என்றதும், உடன் ஒப்புக்கொண்டார். அந்தப் பேட்டிக்காகக் கேட்கப்பட்ட கேள்விகள் மிகவும் காட்டமாக இருந்தன என தலைவர் கூறினார், என்று அவருடைய தனிச் செயலாளர் ராஜமாணிக்கம் குறிப்பிட்டார்.

**கருத்துரிமைக்காக யாரும் குரல் கொடுக்கலாம். ஆனால், அதைக் காப்பதற்காக நின்றவர் கலைஞர் மட்டுமே. அதற்காக ஆட்சியையே விலையாகக் கொடுத்தவர்.**

தமிழ்நாடு அரசின் சார்பிலான முக்கிய அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கை, ஆளுநர் உரையானாலும், கட்சியின் முக்கிய முடிவுகளை அறிவித்த பின்னர், அது பற்றி மக்கள், பத்திரிகையாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதில் அவருக்கு ஆர்வம் மிகுதி. பல தருணங்களில் அவ்வாறு என்னிடம் தொலைபேசியில் கருத்தை அறிந்திருக்கிறார்.

அவர் அன்புக்குப் பாத்திரமாக இருந்ததால்தான், அவர் எழுதிய ‘நெஞ்சுக்கு நீதி’ நூலில் எனக்கும் இடம் கொடுத்தார். இலக்கியத்துறை, திரைத்துறை நண்பர்களை எல்லாம் குறிப்பிட்டவர், ஊடகத்துறையின் நண்பர்கள் எனச் சிலரை அடையாளப்படுத்தியதில் எனது பெயரையும் குறிப்பிட்டிருந்தார். அது என் வாழ்நாளில் எனக்குக் கிடைத்த பெருமிதமான தருணம்.

கருத்துரிமைக்காக யாரும் குரல் கொடுக்கலாம். ஆனால், அதைக் காப்பதற்காக நின்றவர் கலைஞர் மட்டுமே. அதற்காக ஆட்சியையே விலையாகக் கொடுத்தவர். நெருக்கடி நிலை காலத்தில் பெரும் போராட்டத்தை நடத்தியது மட்டுமல்ல, இந்தியாவில் எப்போதெல்லாம் கருத்துரிமை மீது அடக்குமுறை நிகழ்ந்ததோ, அப்போதெல்லாம் அதற்குக் குரல் கொடுத்த ஜனநாயகவாதி தலைவர் கலைஞர். அந்த வகையில், கருத்துச் சுதந்திரம் பேசுவோர் அனைவரும் அவருக்கு நன்றிக்கடன் பட்டவர்கள். கருத்துரிமைக்கு அச்சுறுத்தல் எழும், இந்த நாட்களில் தமிழ்நாட்டைக் கருத்துரிமையின் தனித்தீவாக உருவாக்கிய கலைஞருக்கு இந்தத் தலைமுறை நன்றிக் கடன்பட்டிருக்கிறது.

...பகிர்வார்கள்

## பொதுச் சொத்துக்களும் சமூகநீதியும்!

கடந்த சில ஆண்டுகளாகவே ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை என்றாலே, “இந்த ஆண்டு எவ்வளவு பொதுச் சொத்துக்களை விற்கப் போகிறோர்களோ” என்ற அச்சம்தான் மேலோங்குகிறது. வரும் 2024–25 நிதியாண்டிலும் 50,000 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளைத் திரும்பப் பெற இலக்கு நிர்ணயித்திருப்பதாக நிர்மலா சீதாராமன் நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறார்.

ஆக நிதிநிலை அறிக்கையால் யாருக்கும் மகிழ்ச்சி இல்லை என்று இனி சொல்லமுடியாது. பெரு நிறுவனங்களைப் பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்தும் அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றிருக்கிறது, என்று நிதியமைச்சர் துணிச்சலாகச் சொல்லாம்.

இப்படி ஆண்டுக்கு ஆண்டு பொதுச்சொத்துகளை விற்றுக் கொண்டே இருப்பதன் பின்னணியில், மிகப்பெரிய சமூக அநீதியும் ஒளிந்திருக்கிறது. அரசுப் பணிகளில் மட்டுமே இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வரும் நிலையில், அனைத்தையும் தனியாருக்குத் தாரை வார்த்தால், சமூகநீதியை மண்ணோடு மண்ணாகப் புதைத்து விடலாம் என்ற பேராபத்தும் அதற்குள் இருக்கிறது.

## :ப்ளாஷ்பேக்



### பூங்கா நகர் பிரச்சாரம்!



டிக்ரோஸ்

ஒரு எளிய கழகத் தொண்டனாக இருந்த என்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராவதற்கு அனுமதிச் சீட்டு கொடுத்து, இன்றைய கழகத் தலைவர் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள் என்னை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரம் செய்தார். 2001-ஆம் ஆண்டு பூங்கா நகர் பகுதி, 41-வது வார்டு உறுப்பினர் பொறுப்புக்கு வேட்பாளராக நான் போட்டியிட்டேன். அப்போது என்னை ஆதரித்து “ஏழைப் பங்காளனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள்” என தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். என் வாழ்நாளில் மறக்க முடியாத நினைவைக் கொடுத்த தருணம் என்று இதைக் குறிப்பிடுவேன்.

**–டி.டிக்ரோஸ், மாவட்டத் துணை அமைப்பாளர், வர்த்தகர் அணி, சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பக்திப் பிரச்சாரத்தைத் தடுக்க மாட்டோம்!

**1971 சட்டமன்றத் தேர்தலில் 184 தொகுதிகளில் தி.மு.க. வரலாறு காணாத வெற்றிபெற்ற பிறகு, பல ஆண்டுகளாக ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை ஓடச்செய்தார் கலைஞர். தேர் ஓடுவதற்கான 4 சாலைகள், 4 லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப் பட்டன. இது தொடர்பாக விமர்சனங்கள் எழுந்த போது, ‘‘பகுத்தறிவுப் பிரச்சாரத்தைத் தொடருவோம், பக்திப் பிரச்சாரத்தைத் தடுக்க மாட்டோம்’’ என நெற்றிப் பொட்டில் அடித்தது போல பதிலளித்தார் கலைஞர். தேர் 2 நாட்கள்தான் ஓடும், மற்ற நாட்களில் இந்தச் சாலைகள் மக்களுக்குத்தான் பயன்படும் என்றும் விளக்கினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 378




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131